# வரலாற்றின் மனிதன்

ஈழத் தமிழர் தலைவர்

## அ. அமிர்தலிங்கம் பவழ விழா மலர்


பதிப்பாசிரியர்கள்

சு. மகாலிங்கசிவம் (மாலி)

டாக்டர் பாஞ். இராமலிங்கம்



அமிர்தலிங்கம் நினைவு அறக்கட்டளை

26 ஆகஸ்டு 2002

# வாழ்வின் திருப்புமுனை

**கலாநிதி காரை. செ. சுந்தரம்பிள்ளை**

1953ஆம் ஆண்டு நான் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் 8ம் வகுப்பிற் படித்துக்கொண்டிருந்தேன். ஆங்கில மொழி மூலம் கல்வி பயின்ற காரணத்தால் அம்மொழியை நன்கு பயில வேண்டும் என்ற ஆர்வம் எனக்கிருந்தது. ஆங்கிலத்தை யாரும் பேசும்போதும், மேடையில் கொற்பொழிவு செய்யும்போதும் அதைக் கேட்பதில் எனக்கு ஆர்வம் இருந்தது. இச் சூழ்நிலையில்தான் என்னுடைய கிராமத்துக்கு அடிக்கடி தென்னிலங்கை பொதுவுடமை அரசியல்வாதிகள் வந்து போனார்கள்.

காரைநகர் கிழக்கில் களபூமியின் எல்லையில் எனது கிராமமாகிய பிட்டியோலை இருக்கிறது. இதனையடுத்து ஊரி, தலவோலை எனும் கிராமங்களும் உள்ளன. எல்லாமாக நூறு, நூற்றைம்பது குடும்பங்களே இங்கு வாழ்ந்தனர். பெரும்பாலோர் சாதாரண தொழிலாளிகள். இவர்களுக்கும் அரசியலுக்கும் வெகுதூரம். ஆனால், இவர்களைத் தங்களுடைய அரசியல் வலையில் சிக்க வைப்பதற்குப் பொதுவுடமைவாதிகள் பெரிதும் முயன்றனர்.

மாதத்தில் ஒரு தடவையாவது டாக்டர். என்.எம்.பெரேரா, டாக்டர். கொல்வின் ஆர்.டி.சில்வா எங்கள் கிராமத்துக்கும் அதனையடுத்த வேறு கிராமங்களுக்கும் வருகை தருவார்கள். இரவு எட்டு அல்லது ஒன்பது மணியளவில் யாராவது ஒருவர் வீட்டு முற்றத்தில் அமர்ந்திருந்தபடி தமது கட்சிக் கொள்கைகளை ஆங்கிலமொழியில் அழைகாகப் பேசுவதை பானுதேவன், சுந்தரசிவம் ஆகியோர் தமிழில் மொழிபெயர்ப்பர்.

**27**

களப்பாயில் அமர்ந்தபடி 25 அல்லது 30 பேர்கொண்ட குழுவினர் இவ்விளக்க உரையினைக் கேட்பர். அவர்கள் என்ன பேசுகின்றார்கள் என்பதை விட அவர்களுடைய ஆங்கில உச்சரிப்பையே நான் அவதானித்து வந்தேன்.

வர்க்கபேதம், சமூக ஏற்றத்தாழ்வு, பொருளாதார சமத்துவமின்மை, ஏதேச்சாதிகாரம், ஜனநாயகம், போராட்டம், ஒத்துழையாமை என்றெல்லாம் இவர்கள் பேசி வந்தமை அந்த வயதில் எனக்குத் தெளிவாக விளங்கவில்லை. ஆனால், பொருளாதார அடிப்படையிலும், சாதி அடிப்படையிலும், பின்தள்ளப்பட்ட மக்களை, கைகொடுத்துத் தூக்கிவிடவேண்டும் என்று அடிக்கடி சொல்லி வந்தார்கள். என்னைப் போன்ற இரண்டொரு சிறுவர்களும், இளைஞர்களும் கூட்டங்களில் தவறாது பங்குபற்றி வந்தமை எம்மவருள் சில பேருக்குப் பிடிக்கவில்லை. அதற்குரிய காரணம் காலம் போகப் போகத்தான் தெரிய வந்தது. தென்னகத் தலைவர்களாயினும் சரி, இக்கூட்டங்களை நடத்திய உயர்சாதியினராயினும் சரி, தேர்தல் காலத்தில் வாக்கு வேட்டையாடுவரை மட்டும் மனதிற் கொண்டிருந்தார்களேயன்றி, சமூகத்தொண்டில் எள்ளளவும் ஈடுபடவில்லை. யாழ்ப்பாணத்தில் வேறு கிராமங்களுக்கு இது பொருந்தாமல் இருக்கலாம். ஆனால், காரைநகரைப் பொறுத்தவரையில் இது முற்றிலும் உண்மை. இச் சூழ்நிலையில்தான் திரு. அமிர்தலிங்கத்தின் தொடர்பு எனக்குக் கிடைத்தது.

1955ஆம் ஆண்டு நான் ஜி.சி.ஈ சாதாரண வகுப்பிற் பயின்றுகொண்டிருந்தேன். எங்களுடைய இலக்கிய மன்றத்துக்கு வருகைதந்த அமிர்தலிங்கம், அக்கால அரசியல் நிலைமை பற்றியும், தமிழர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் பற்றியும் மிக அழகாக எடுத்துக் கூறினார். மிகவும் இளைஞனாகிய அமிர்தலிங்கத்தின் பேச்சு எங்கள் எல்லோரையும் கவர்ந்ததில் வியப்பில்லை. கூட்டம் முடிந்த பின்னர் நானும் வேறுசில இளைஞர்களும் அமிர்தலிங்கத்துடன் ஒரு மணித்தியாலத்துக்கு மேலாக எங்கள் சந்தேகங்களைக் கேட்டுத் தீர்த்துக் கொண்டோம்.

சிறிது காலம் சென்ற பின்னர் அமிர்தலிங்கத்தை எங்களுடைய கிராமத்தில் நடைபெற்ற பாரதி விழாவுக்கு அழைத்திருந்தோம். இந்திய விடுதலைப் போராட்டத்துக்கு பாரதி ஆற்றிய பங்களிப்பு, எழுச்சிமிக்க கவிதைகள் மூலம் அவன் இந்திய மக்களைத் தட்டி எழுப்பியமை, ஆங்கில ஆட்சியை அஞ்சாது எதிர்த்து நின்றமை என்பன பற்றி மிகவும் அழகாகப் பேசினார். நான் பிற்காலத்தில் அரசியலில் குதிப்பதற்கும், மேடைப் பிரசங்கம் செய்வதற்கும், விடுதலைப் போராட்டக் கவிதைகள் பாடுவதற்கும் அமுதரின் இந்தப் பேச்சுத்தான் ஒரு திருப்புமுனையாக அமைந்தது எனலாம்.

ஒரு கிழமையின் பின்னர் நான் அமிர்தலிங்கத்தை அவருடைய வீட்டுக்குச் சென்று சந்தித்தேன். தென்னகத் தலைவர்களைப் போல நீங்களும் ஏன் கிராமம் கிராமமாகச் சென்று சிறு சிறு கூட்டங்களை வைக்கக் கூடாதெனக் கேட்டேன். அதற்கிசைந்த அமிர்தலிங்கம் எமது வாசகசாலையில் எமது கிராம மக்களைச் சந்தித்து உரையாட வருகைதந்தார். நாம் எதிர்பாராத அளவுக்கு நூற்றுக்கணக்கான ஆண்களும் பெண்களும் இக்கூட்டத்துக்கு வருகை தந்தார்கள். இதனையடுத்து ஊர்க் கிராமத்தில் ஒரு கூட்டத்துக்கு ஒழுங்கு செய்தோம். இவ்வாறு கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, மறைந்திருந்து கற்களை வீசி கூட்டத்தைக் குழப்ப முயற்சித்தார்கள். அப்பொழுது அமிர்தலிங்கம், 'கருத்து வேறுபாடுகள் இருந்தால் பேசித் தீர்த்துக்கொள்வோம். கோழைகள் போலக் கற்களை வீசவேண்டாம்' எனப் பவ்வியமாக எடுத்துரைத்தார். இதற்கிடையில் எமது தொண்டர்கள் சிலர் கல்வீசியவர்களைக் கலைத்துப் பிடித்து பெரியவர்கள் முன்னிலையில் கொண்டுவந்து நிறுத்தினார்கள். அதனால் ஏற்பட்ட கலவரத்தில் கூட்டம் இடையிற் குழம்பிவிட்டது. இதனையடுத்து தமிழரசுக்கட்சியின் செல்வாக்கு காரைநகர் கிழக்கில் வேகமாகப் பரவத்தொடங்கியது.

நான் 'சுதந்திரன்' போன்ற பத்திரிகைகளில் அடிக்கடி எழுதி வந்தேன். அமிர்தலிங்கம் என்னுடைய கவிதைகளைப் பாராட்டி ஊக்கி வந்தார். இச்சூழ்நிலையில்தான் சிங்கள சிறீ எதிர்ப்பு வலுவடைந்து வந்தது. தமிழரசுக் கட்சி அதனை ஒரு போராட்டமாகவே நடத்தத் தீர்மானித்தது. நான் அப்பொழுது ஜி.சி.ஈ உயர்தர வகுப்பிற் கல்வி பயின்று கொண்டிருந்தேன். என்னுடன் கல்விபயின்ற பல இளைஞர்கள் சிறீ எதிர்ப்பு இயக்கத்தில் இணைந்து கொண்டனர். அவர்களுள் முக்கியமானவர் இன்றைய யாழ்ப்பாண பாரதிபதிப்பக உரிமையாளர் திரு.சங்கர் 1956ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் சிங்கள சிறீயை அழிப்பதென்று தீர்மானம் எடுக்கப்பட்டது. அமிர்தலிங்கம் போன்றோர் சிங்கள சிறீயை அழிக்கும்போது, தார் சட்டி ஏந்தியவர்களில் நானும் ஒருவன். அப்பொழுது தலைவர்களையும் எம்போன்ற இளைஞர்களையும் மூர்க்கத்தனமாகப் போலிசார் தாக்கினார். திரு. அமிர்தலிங்கத்தின் மனைவி மகப்பேற்றுக்காக மருத்துவமனையில் இருந்தபோதும், அமிர்தலிங்கம் இப்போராட்டத்தில் பங்குபற்றியமை எங்கள் எல்லோரையும் உற்சாகப்படுத்தியது.

சிறீ அழிப்புப் போராட்டத்துடன் நான் தீவிரமாகக் கட்சி நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கினேன். இது என்னுடைய தாயாருக்குப் பிடிக்கவில்லை. ஒருநாள் அமிர்தலிங்கம் வீட்டுக்கு வந்தபோது, தம்பி, படிக்கிற பொடியனை நீர் ஏன் குழப்புகிறீர்? என்று கேட்டுவிட்டார். அப்பொழுது நான் பி.ஏ, வகுப்பிற்பயின்று கொண்டிருந்தேன். எனக்குத் தர்மசங்கடமாகிவிட்டது. அதற்கு அமிர்தலிங்கம் சிரித்துக் கொண்டே, அவர் தீவிரமாக ஈடுபடாமல் நான் பார்த்துக்கொள்கிறேன் என்று சமாளித்துக் கொண்டார். நான் சிறீ அழிக்கப்போய் அடியும் உதையும் வாங்கியதை அம்மாவால் ஜீரணிக்க முடியவில்லை.

நான் பட்டதாரியாகியபின் கொழும்பு சென் யோசேப் கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிந்தபோது யாழ்ப்பாணத்தில் கச்சேரிமுன்பாக சத்தியாக்கிரகப் போராட்டம் நடைபெற்றது. நான் இதில் பங்குபெறுவதற்காக கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்தேன். இச்செய்தி என்னுடைய கல்லூரி அதிபர் வண. பீற்றப்பிள்ளையின் காதுக்கு எட்டியது. நான் கல்லூரிக்குத் திரும்பியபொழுது அதிபர் என்னை தன்னுடைய அலுவலகத்துக்கு அழைத்தார். சத்தியாக்கிரகத்துக்குப் போகும் பொழுது ஒரு வார்த்தை எனக்குச் சொல்லிவிட்டுப் போயிருக்கலாமே, நான் ஒன்றும் விடுதலைப் போராட்டத்துக்கு விரோதியல்லன் என்று கூறிய அவர், அமிர்தலிங்கம் போன்ற இளைஞர்கள் பலர் எம்மத்தியில் தோன்ற வேண்டும் என்று கூறினார். அச்சத்தோடு அவரைச் சந்திக்கச் சென்ற எனக்கு அதுவொரு எதிர்பாராத அதிர்ச்சியாக இருந்தது.

காரைநகரில் வாழ்ந்த தாழ்த்தப்பட்ட மாணவர்கள் உயர்கல்வி பெறுவதற்கு ஊர்காவற்றுறை, வட்டுக்கோட்டை, சுளிபுரம் ஆகிய இடங்களுக்குச் செல்லவேண்டியிருந்தது. காரை நகர் இந்துக் கல்லூரியிலும், யாழ்ரன் கல்லூரியிலும் அவர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. 1961ம் ஆண்டு நான் காரை நகர் இந்துக் கல்லூரி அதிபர். ஆ. தியாகராஜா அவர்களைச் சந்தித்தேன். பல சிரமங்களுக்கு மத்தியில் தூர இடங்களுக்குச் சென்று கல்விபயிலும் இம் மாணவர்களை ஏன் இந்துக் கல்லூரியில் அனுமதிக்கக் கூடாது எனக் கேட்டேன். இதற்குத் தியாகராஜா கோபத்துடன் மறுப்புத் தெரிவித்துவிட்டார். "இக்கல்லூரி முன்பு தனிப்பட்ட பாடசாலையாக இருந்தது. இப்போது அரசாங்கப் பாடசாலையாகிவிட்டது. தொடர்ந்து நீங்கள் அனுமதி மறுப்பது நியாயமற்றது என்று கூறினேன். இதனால் ஆத்திரமடைந்த தியாகராஜா "நீர் ஒரு பள்ளிக்கூடத்தைக் கட்டி, அதிபராக இருந்து அனுமதி வழங்கும்" என, 'நக்கலாக' கூறினார்.

நான் இதுபற்றி அமிர்தலிங்கத்திடம் சென்று, இக்கல்லூரியில் எப்படியாவது தாழ்த்தப்பட்ட மாணவர்களை அனுமதிக்க வேண்டும்; அதற்கு ஆவன செய்யுங்கள் எனக்கேட்டேன். அமிர்தலிங்கம் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த வட்டுக்கோட்டைத் தொகுதியில்தான் காரைநகரும் இருந்தது. அமிர்தலிங்கத்துக்கு இதுவொரு கடமையாகவும் இருந்தது. எனவே அடுத்த நாள் நானும் அமிர்தலிங்கமும் தியாகராஜாவை நேரில் சந்தித்தோம். தியாகராஜா தன்னுடைய எண்ணப்படி அனுமதி வழங்கமுடியாதென்றும், காரைநகரிலுள்ள உயர்சாதியினரின் எதிர்ப்பைச் சந்திக்கத் தயாரில்லை என்றும் கூறிவிட்டார். மேலும், இது மட்டும்தானா கல்லூரி, யாழ்ரன் கல்லூரி இல்லையா, அங்கேயும் அனுமதி கேட்கலாமே என்று கூறி மறுத்துவிட்டார்.

நானும் அமிர்தலிங்கமும் யாழ்ரன் கல்லூரி முன்னாள் முகாமையாளர் செல்லப்பா, வேலுப்பிள்ளையிடம் சென்றோம். அவர் தியாகராஜாவின் சொந்த மைத்துனர். தமிழரசுக்

கட்சி ஆதரவாளர். அமிர்தலிங்கம் நடந்த விடயங்களைக் கூறி, யாழ்ரன் கல்லூரியில் அனுமதி வழங்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். இதற்கு செல்லப்பா வேலுப்பிள்ளை சிரித்தபடி அமிர்தலிங்கத்தை ஏன் கூட்டிக்கொண்டு வந்தீர்கள்? நீங்கள் வந்து கேட்டால் மறுப்பேனா, நாளைக்கு அந்த மாணவர்களை அழைத்து வாருங்கள் என்று கூறினார்.

யாழ்ரன் கல்லூரியில் மாணவர்கள் சேர்க்கப்பட்ட செய்தி தியாகராஜாவின் காதுகளுக்கு எட்டியது. இது இவ்வாறிருக்க இச்செய்தி சுதந்திரன் பத்திரிகையில் வெளியாகியது. தியாகரைப் பற்றி பலரும் பலவிதமாகப் பேசத் தொடங்கிவிட்டனர். பதட்டமடைந்த தியாகர் தானாகவே வலியவந்து தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு அனுமதி வழங்கினார்.

இவ்வாறு, அமுதருக்கும் எனக்குமிடையில் அரசியல் ரீதியாக மட்டுமன்றி, தனிப்பட்ட முறையிலும் நட்பு நெருக்கமாகியது. தடித்த தமிழரசுக் கட்சி வாதியான ஒருவரின் மகளையே நான் திருமணம் செய்தேன், தி.மு.க செல்வாக்குக் காரணமாக பிராமணக் குருக்களை வைத்து, திருமணத்தைச் செய்ய விரும்பவில்லை. எனவே, அமிர்தலிங்கத்தின் தலைமையில் என் திருமணம் நடைபெற்றது. இதைப் பின்பற்றிப் பல இளைஞர்கள் அரசியல் தலைவர்களின் தலைமையில் திருமணம் செய்யலாயினார்.

1977ஆம் ஆண்டு தேர்தல் நெருங்கியபொழுது கோப்பாய் தொகுதியின் வேட்பாளராக என்னை நிறுத்துவது என கட்சி தீர்மானித்தது. அமிர்தலிங்கமும், ஆலாலசுந்தரமும் என்னை எவ்வளவோ வற்புறுத்தியும் நான் மறுத்துவிட்டேன். அமிர்தலிங்கத்துக்கு இது மிகுந்த கவலையைக் கொடுத்தது என்பது எனக்குத் தெரியும்.

கட்சியின் போக்கு காலப்போக்கில் சிறிது மாறுபடத் தொடங்கியது. எம்போன்ற இளைஞர்கள் கட்சி எக்காரணத்தைக் கொண்டும் அரசாங்கத்துடன் உறவு வைத்துக் கொள்வதையோ சலுகைகள் பெறுவதையோ விரும்பவில்லை. 1977ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின்போது தமிழர் விடுதலைக் கூட்டணி அமோக வெற்றிபெற்றது. இது பாராளுமன்றத்தில் இரண்டாவது பெரும்பான்மைக் கட்சியாக இருந்த காரணத்தால் திரு. அமிர்தலிங்கம் எதிர்கட்சித் தலைவரானார். பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அரசாங்கம் சலுகை அடிப்படையில் ஜப்பான் ஜீப் வழங்கியது. இதை ஏற்றுக் கொள்ளக்கூடாதென்பது இளைஞர்களின் கருத்தாக இருந்தது. 1977ஆம் ஆண்டு ஆவரங்காலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மகாநாடு இடம்பெற்றது. இதில் நடைபெற்ற கவியரங்கில் பங்குபற்றிய நான் வாசித்த கவிதைகள் பெரிய பரப்பை ஏற்படுத்தியது. “கேட்டது தமிழீழம் கிடைத்தது ஜப்பான் ஜீப்” என்ற கவிதைவரிகள் சில கூட்டணித் தலைவர்களை ஆத்திரமடைய வைத்தன.

திரு. ஆனந்தசங்கரி கூட்டத்தில் பேசும்போது, காரை.சுந்தரம்பிள்ளை குறுக்கு வழியால் கவிஞராகப் பார்க்கிறார் எனத் தன் ஆத்திரத்தைக் கொட்டித் தீர்த்தார். ஆலாலசுந்தரம் என்னை ஆதரித்துப் பேசினார். நிறைவாகப் பேசிய திரு. அமிர்தலிங்கம் நிதானமாகப் பின்வருமாறு கூறினார். "கவிஞர். காரை. சுந்தரம்பிள்ளை எமது கட்சிக்காரன். எமது கட்சியில் உள்ள குறைநிறைகளைக் கூறும் உரிமை அவருக்குண்டு. எமது கட்சி ஜனநாயகப் பாதையில் செல்கின்றது. கருத்துச் சுதந்திரத்துக்கு எமது கட்சியில் இடமுண்டு என்பதற்கு இது நல்ல உதாரணம்.

அடுத்த வருடம் காரை நகர் இந்துக் கல்லூரிக்கு என்னை அதிபராகச் செல்லும்படி அமிர்தலிங்கம் கேட்டுக்கொண்டார். முதலில் தயங்கிய நான், பின்னர் ஒரு நிபந்தனையுடன் ஏற்றுக்கொண்டேன். எக்காரணத்தைக் கொண்டும் எனது நிருவாகத்தில் அரசியல் தலையீடு இருக்கக்கூடாது எனக் கேட்டுக்கொண்டேன். அதை ஏற்றுக் கொண்ட அமிர்தலிங்கம், காரைநகர் இந்துக் கல்லூரி முன்னாள் அதிபரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமாகிய ஆ. தியாகராஜாவையும் மேவி நடவுங்கள் என அறிவுரை வழங்கினார். எல்லோரையும் மதிக்கும் அரிய குணம்படைத்தவர் அமிர்தலிங்கம்.

1986ம் ஆண்டு நான் தலாவக்கலை ஆசிரிய பயிற்சிக்கலாசாலையில் அதிபராக இருந்தபோது, அமைச்சர் தொண்டமான் வீட்டில் அமிர்தலிங்கத்தைச் சந்தித்தேன். அப்பொழுது அமிர்தலிங்கம் தொண்டமானைப் பார்த்து, உங்களுக்கு நல்லதொரு அதிபரைத் தந்துள்ளோம் என்று கூறினார். அதற்குத் தொண்டமான், "அவர் நல்ல அதிபராக இருக்கலாம். ஆனால் நம்ம ஆளுங்களை அனுசரித்துப் போகிறாரில்லையே" என்று குறைபட்டுக் கொண்டார். அதற்கு அமிர்தலிங்கம் "தன்னுடைய நிருவாகத்தில் அவர் எப்பொழுதும்' அரசியல்வாதிகள் தலையிடுவதை விரும்புவதில்லை. உங்களுக்கு இஷ்டமில்லையென்றால் அவரை எங்களுக்கே திருப்பித்தாருங்கள்" என்று பதிலளித்தார்.

இரண்டொரு மாதங்களின் பின் தலாவாக்கலை ஆசிரிய பயிற்சிக்கலாசாலை விடுதியில் (என் அறையில்) எனது சக விரிவுரையாளர், ஓர் இரவு படுகொலை செய்யப்பட்டார். அடுத்த நாள் காலை, மிகப்பதட்டத்துடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட அமிர்தலிங்கம், என்ன நடந்தது? எனக் கேட்டார். நடந்தவற்றைச் சுருக்கமாக் கூறி, விரிவாக நேரில் கூறுகின்றேன் எனச் சொன்னேன். பின்னர் அவரை நேரிற் காணவில்லை. அவருடைய பூதவுடலை மட்டும் யாழ் முற்றவெளியில் காணமுடிந்தது.